# தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மயிலாடுதுறை

அ.சா.23 நாள் 18.11.2025

| | | | |
|---|---|---|---|
| CC. No. | 233/2025 | | |
| பெயர் | அருள்செல்வன் | த/பெ. | கோவிந்தராஜ் |
| வயது | 48 | தொழில் | மருந்து கடை |
| கிராமம் | கருப்பம்புலம் | தாலுக்கா | வேதாரண்யம் |

(எதிரிகள் ஆஜர்.).

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :-

நான் நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் தாலுக்கா, கருப்பம்புலம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் 1998 முதல் 2010 ஆண்டு வரை Lab டெக்னிசியனாக பணிபுரிந்தேன். நான் தற்போது கத்திரிபுலத்தில் அபி மெடிக்கல் என்ற பெயரில் மெடிக்கல் கடை வைத்து நடத்தி வருகிறேன். எதிரிகளை தெரியும். கடந்த 2010 அல்லது 2011 ம் ஆண்டு ஒரு நண்பர் மூலம் குத்தாலத்தில் மாற்றுமுறை மருத்துவம் என்ற பெயரில் சான்றிதழ்கள் தருவதாக என்னிடம் சொன்னார். நான் செல்வராஜ் என்பவரை தொடர்பு கொண்டேன். அப்போது செல்வராஜும் மற்றொரு நபரும் மேற்படி சான்றிதழை வாங்கினால் 31 வகையான ஆங்கில மருந்துகளை பயன்படுத்தலாம் என்று சொன்னார்கள். அந்த சான்றிதழை பெறுவதற்காக ரூ.7000/- செல்வராஜிடம் செலுத்தினேன். நான் வாரம் ஒருமுறை என 15 நாட்கள் வகுப்பிற்கு சென்றேன். 6 மாதம் கழித்து RMP என ஒரு சான்றிதழை குத்தாலத்தில் வைத்து கொடுத்தார்கள். என்னிடம் காட்டப்படும் சான்றிதழ் ஜெராக்ஸ் நகலில் உள்ள புகைப்படம் என்னுடையதுதான். மேற்படி செல்வராஜ் என்பவரால் கொடுக்கப்பட்ட RMP சான்றிதழ் நகல்தான். அந்த ஜெராக்ஸ் நகல் **அ.சா.ஆ.26** ஆகும். (அ.சா.ஆ.26 ஜெராக்ஸ் நகல் எதிரி வழக்கறிஞர் ஆட்சேயபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) என்னை குற்றப்பிரிவு குற்ற புலனாய்வு துறை போலீசார் விசாரித்தார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-

நான் தற்போது மருந்தகம் வைத்துள்ளேன். இதற்கு முன்பு Lab

CJM, MAYILADUTHURAI.

டெக்னிசியனாக கடை வைத்திருந்தேன். மாற்றுமுறை மருத்துவம் குறித்த விபரம் ஒரு நண்பர் மூலமாக எனக்கு தெரியவந்தது. செல்வராஜின் தொலைபேசி எண் அந்த நண்பர் மூலமாக எனக்கு தெரியவந்தது. எந்த வருடம் படித்தேன் என்றால் 2010 அல்லது 2011 வருடம் இருக்கும். என்னுடன் நிறைய பேர் படித்தார்கள். பணம் செலுத்தியதற்கு என்னிடம் எந்த இரசீதும் இல்லை. பணம் கொடுத்திருந்தால் இரசீது கொடுத்திருப்பார்கள் என்றும், அவ்வாறு பணம் எதுவும் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. மாற்றுமுறை மருத்துவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. எப்போது சான்றிதழ் வாங்கிய தேதி எனக்கு ஞாபகம் இல்லை. 2021–ல் எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது எனக்கு தெரிய வந்தது. போலி சான்றிதழ் என்று சொல்லும் பட்சத்தில் அது குறித்து நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. போலீசார் காவல் நிலையத்தில் வைத்து என்னை விசாரித்தார்கள். போலீசார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். நான் கொடுத்ததாக சொல்லப்படும் சான்றிதழில் என்ன படிப்பு நான் படித்தாக குறிப்பிட்டுள்ளது என்று சொன்னால் RMP மட்டும் குறிப்பிட்டுள்ளது. என்னிடம் உள்ள சான்றிதழ் போலி சான்றிதழ் என்று போலீசார் சொல்லி தான் எனக்கு தெரியாது. நான் செல்வராஜ், கிருஷ்ணமூர்த்தி, பாலசுந்தரம் ஆகியோரை குத்தாலத்தில் நான் படித்தபோது பார்த்துள்ளேன். குத்தாலத்தில் செல்வராஜ் வீட்டில் வைத்து படித்தேன். ஆனால், அவருடைய விலாசம் எனக்கு தெரியாது. அது செல்வராஜ் உடைய வீடு என்பது மட்டும் எனக்கு தெரியும். நான் சொல்வது போல் National Board of Alternative Medicine என்ற நிறுவனத்தில் நான் முறையாக படித்திருந்தால் அசல் ஆவணம் என்னிடம் இருந்திருக்கும் என்றும், போலீசாருக்கு ஒத்துழைக்க வேண்டும் என்று பொய்யான சங்கதிகளை கொண்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> :–

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

18/11/23

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

CJM, MAYILADUTHURAI.

# தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
# மயிலாடுதுறை

அ.சா.24 நாள் 18.11.2025

| | | | |
|---|---|---|---|
| CC. No. | 233/2025 | | |
| பெயர் | சகாதேவன் | த/பெ. | சோமசுந்தரம் |
| வயது | 61 | தொழில் | விவசாயம் |
| கிராமம் | நெய்விளக்கு | தாலுக்கா | வேதாரண்யம் |

(எதிரிகள் ஆஜர்,).

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :-

நான் வேதாரண்யம் வட்டம், நெய்விளக்கு கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் வேலை செய்து வருகிறேன். நான் 12 வகுப்பு வரை படித்துள்ளேன். செம்போடை சொக்கலிங்கம் என்பவரை தெரியும். எதிரி செல்வராஜ் என்பவரை தெரியும். மேற்படி செம்போடை சொக்கலிங்கம் பட்டிமன்ற நடுவராக இருந்தார். நான் பட்டிமன்றங்களில் பேசுவேன். அதனால் சொக்கலிங்கத்தை எனக்கு தெரியும். கடந்த 2010 வருடம் சொக்கலிங்கம் செல்வராஜ் என்பவர் நாளிதழில் சித்த மருத்துவ படிப்பிற்கு விளம்பரம் செய்துள்ளதாக என்னிடம் சொன்னார். அதன் பின்னர், நான் செல்வராஜை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டேன். என்னை செல்வராஜ் குத்தாலம் அலுவலகத்திற்கு வர சொன்னார். ஆறுமாதம் பயிற்சி எடுத்தால் சித்த மருத்துவ சான்றிதழ் வழங்குவதாக செல்வராஜ் என்னிடம் சொன்னார். நான் 2 வகுப்புகளுக்கு சென்றேன். அவர் வகுப்புகளை குத்தாலத்தில் நடத்தினார். ஆறுமாதம் கழித்து குத்தாலம் National Board of Alternative Medicine என்ற அலுவலகத்தில் சித்தா மருத்துவ சான்றிதழை கொடுத்தார். அப்போது நான் ரூ.5000/- பணம் செலுத்தினேன். ன்னிடம் காட்டப்படும் சான்றிதழ் ஜெராக்ஸ் நகலில் உள்ள புகைப்படம் என்னுடையதுதான். மேற்படி செல்வராஜ் என்பவரால் கொடுக்கப்பட்ட RMP மருத்துவ சான்றிதழ் நகல்தான். அந்த ஜெராக்ஸ் நகல் **அ.சா.ஆ.27** ஆகும். (அ.சா.ஆ.27 ஜெராக்ஸ் நகல் எதிரி வழக்கறிஞர்

CJM, MAYILADUTHURAI.

ஆட்சேயபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) என்னை குற்றப்பிரிவு குற்ற புலனாய்வு துறை போலீசார் விசாரித்தார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-

நான் தற்போது விவசாயம் செய்து வருகிறேன். நான் சொக்கலிங்கம் மூலமாகத்தான் செல்வராஜை எனக்கு தெரியும். 2010ம் ஆண்டு சேர்ந்தேன். ஆறுமாதம் கழித்து சான்றிதழ் பெற்றேன். என்னுடன் 3, 4 நபர்கள் இருந்தார்கள். 2021 ம் ஆண்டு தான் குற்றப்புரிவு குற்றபுலனாய்வு என்னை விசாரணை செய்தார்கள். அப்போது எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த விபரம் எனக்கு தெரியும். நான் சான்றிதழ் சம்மந்தமாக நான் எந்தவித புகாரும் கொடுக்கவில்லை. போலீசார் என்னை காவல் நிலையத்தில் வைத்துதான் விசாரித்தார்கள். அந்த சான்றிதழ் 2021ம் வருடம் காணாமல்போய்விட்டது. போலீசார் கேட்டுக்கொண்டதற்கினங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை :-

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

18/1/23

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

CJM, MAYILADUTHURAI.

# தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மயிலாடுதுறை

அ.சா.25 நாள் 18.11.2025

| CC. No. | 233/2025 | | |
|---|---|---|---|
| பெயர் | முருகேசன் | த/பெ. | A.K. முத்து |
| வயது | 57 | தொழில் | மருந்து கடை |
| கிராமம் | எடுத்துக்கட்டி சாத்தனூர் | தாலுக்கா | தரங்கம்பாடி |

(எதிரிகள் ஆஜர்.).

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :-

நான் தரங்கம்பாடி தாலுக்கா எடுத்துக்கட்டி சாத்தனூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது மருந்தகம் வைத்துள்ளேன். நான் 10 –ம் வகுப்பு வரை படித்துள்ளேன். கடந்த 2011 ஆண்டு குத்தாலத்தில் நடைபெற்ற திருமண விழாவிற்கு சென்றபோது எனது ஒரு நண்பர் என்னிடம் மருத்துவ சம்மந்தமாக ஒரு Meeting குத்தாலத்தில் நடைபெறுவதாக சொன்னார். நான் அங்க சென்றேன். செல்வராஜ் தலைமையில் Meeting நடைபெற்றது. அங்கு நான் சென்றபோது 10, 15 பேர் இருந்தார்கள். நுழைவாயிலேயே அனுமதி கட்டணம் ரூ.5000/– கட்ட சொன்னார்கள். நான் ரூ.2500/– மட்டும் செலுத்தினேன். அந்த meeting–ல் அக்குபஞ்சர், சித்தா போன்ற படிப்புகள் இருப்பதாக சொன்னார்கள். நான் அந்த படிப்புகள் படிக்க விருப்பம் இல்லாததால் அதன் பின்னர் செல்லவில்லை. என்னை குற்றப்பிரிவு குற்ற புலனாய்வு துறை போலீசார் விசாரித்தார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-

நான் தற்போது எடுத்துக்கட்டி சாத்தனூரில் மெடிக்கல் வைத்துள்ளேன். நான் பணம் செலுத்தியதற்கு இரசீது ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. நான் படிக்கவும்இல்லை, எந்த சான்றிதழும் வாங்கவில்லை. என்னை போலீசார் எப்போது விசாரித்தார்கள் என்றால் 2021 ஆம் ஆண்டு விசாரித்தார்கள். போலீசார் நான் சொல்ல சொல்ல

CJM, MAYILADUTHURAI.

M. Murugesan.

எழுதிக்கொண்டார்கள். எனக்கு இந்த வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

<u>மறு விசாரணை</u> :–

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

18/11/13

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

CJM, MAYILADUTHURAI.

## தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மயிலாடுதுறை

அ.சா.26 நாள் 18.11.2025

| | | | |
|---|---|---|---|
| CC. No. | 233/2025 | | |
| பெயர் | சொக்கலிங்கம் | த/பெ. | கணேசன் |
| வயது | 65 | தொழில் | சித்த மருத்துவர் |
| கிராமம் | செம்போடை | தாலுக்கா | வேதாரண்யம். |

(எதிரிகள் ஆஜர்,).

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :-

நான் வேதாரண்யம் தாலுக்கா, செம்போடை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் பரம்பரை சித்த வைத்தியர் மற்றும் பட்டிமன்ற நடுவராகவும், இலக்கிய பேச்சாளராகவும் இருந்து வருகிறேன். சாட்சிகள் சிவசண்முகம், சகாதேவனை தெரியும். சகாதேவன் பட்டிமன்ற பேச்சாளர். எதிரிகளை தெரியும். எதிரி செல்வராஜ் என்பவர் National Board of Alternative Medicine என்ற பெயரில் மருத்துவ படிப்புகள் நடத்தி வருவதாக கேள்விபட்டேன். அவருடைய நிறுவனத்தில் மாற்றுமுறை மருத்துவம் படிக்க விரும்புவதாக சொன்னேன். நான் இரண்டு, மூன்று வகுப்புகள் சென்றேன். அந்த வகுப்புகள் நடைபெற்ற வருடம் 2019, 2020 வருடமாக இருக்கலாம் என்று நினைக்கிறேன். அதன் பிறகு எனக்கு செல்வராஜ் குத்தாலத்தில் வைத்து National Board of Alternative Medicine Institute என்ற பெயரில் RMP என்ற சான்றிதழை வழங்கினார். என்னிடம் காட்டப்படும் சான்றிதழ் ஜெராக்ஸ் நகலில் உள்ள புகைப்படம் என்னுடையதுதான். மேற்படி செல்வராஜ் என்பவரால் கொடுக்கப்பட்ட RMP மருத்துவ சான்றிதழ் நகல்தான். அந்த ஜெராக்ஸ் நகல் **அ.சா.ஆ.28** ஆகும். (அ.சா.ஆ.28 ஜெராக்ஸ் நகல் எதிரி வழக்கறிஞர் ஆட்சேயபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) என்னை குற்றப்பிரிவு குற்ற புலனாய்வு துறை போலீசார் விசாரித்தார்.

CJM, MAYILADUTHURAI.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-

நான் தற்போது சித்த மருத்துவராகவும், பட்டிமன்ற பேச்சாளராகவும் உள்ளேன். சாட்சி சகாதேவனை எனக்கு தெரியும். நான் 2019, 2020 ஆண்டு படித்தேன். நான் குத்தாலம் சென்று படித்தேன். நான் பணம் செலுத்தியதற்கான இரசீது எதுவும் இல்லை. 2021 ம் ஆண்டு தான் குற்றப்புரிவு குற்றபுலனாய்வு என்னை விசாரணை செய்தார்கள். என்னுடைய அசல் ஆவணம் எங்கு உள்ளது என்றால் தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை :-

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

18.11.23

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

CJM, MAYILADUTHURAI.

# தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மயிலாடுதுறை

அ.சா.27 நாள் 18.11.2025

| CC. No. | 233/2025 | | |
|---|---|---|---|
| பெயர் | சந்திரசேகரன் | த/பெ. | முருகேசன் |
| வயது | 51 | தொழில் | நகை கடை |
| கிராமம் | கொல்லுமாங்குடி | தாலுக்கா | நன்னிலம் |

(எதிரிகள் ஆஜர்.).

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :-

நான் நன்னிலம் தாலுக்கா, கொல்லுமாங்குடி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் பேரளத்தில் நகை அடகு கடை நடத்தி வருகிறேன். எதிரிகளை தெரியும். 2010 ஆம் ஆண்டு எனது நண்பர் ஒருவர் மூலம் செல்வராஜ் குத்தாலத்தில் மருத்துவ படிப்பு நடத்தி வருவதாக கேள்விபட்டேன். நான் குத்தாலத்திற்கு சென்றேன். எனக்கு செல்வராஜ் Membership Card வழங்கினார். சித்தா படிப்புக்காக என்னிடம் ரூ.15000/- செல்வராஜ் கேட்டார். நான் ரூ.7000/- மட்டும் அப்போது செலுத்தினேன். பணம் மட்டும் செலுத்தினேன். வகுப்புகள் எதுவும் செல்லவில்லை. என்னிடம் காட்டப்படும் Membership Card செல்வராஜ் வழங்கியதுதான். அந்த Membership Card-ன் அசல் **அ.சா.ஆ.29** ஆகும். என்னிடம் காட்டப்படும் Membership Card-ல் உள்ள புகைப்படம் என்னுடையதுதான். என்னை குற்றப்பிரிவு குற்ற புலனாய்வு துறை போலீசார் விசாரித்தார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-

தமிழ்நாடு அரசு பதிவு பெற்ற மருத்துவர்கள் நல சங்கம் என்ற சான்றிதழ் கொடுத்தார். அது அரசு அங்கீகாரம் பெற்றதுதான். இந்த Membership Card என்னிடம் கொடுக்கும்போது குத்தாலம் காவல் ஆய்வாளர் மூவேந்தன் முன்னிலையில் தான் கொடுத்தார். நான் பணம் செலுத்தியதற்கான இரசீது எதுவும் பெறவில்லை. நான் அங்கு படிக்கவும் இல்லை. நான் படித்தற்கான சான்றிதழ் எதுவும் வழங்கவில்லை. நான்

CJM, MAYILADUTHURAI.

அங்கு படிக்கவில்லை, போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> :-

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

18/11/12

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

CJM, MAYILADUTHURAI.